# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 03 திங்கட்கிழமை 19.08.2024 கதிர் 336







# பிரச்சினைகளிலிருந்து தப்பிச் செல்லவில்லை

## ரணிலின் கருத்துக்கு சஜித் பதிலடி



**“நான் பிரச்சினைகளிலிருந்து தப்பிச் செல்வதில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கான சவால்களில் முன் நிற்கிறேன். வேறு வேட்பாளர்களைக் களமிறக்கி கட்சியின் தலைமைத்துவத்தைப் பாதுகாத்துக் கொள்கின்ற நிலைப்பாட்டில் நான் இருக்கவில்லை” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

**நாடு பிரச்சினையை எதிர்கொண்ட போது சஜித் பிரேமதாச தப்பிச் சென்றதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே சஜித் இதனைத் தெரிவித்தார்.**

2 ►

# விளக்கம் கேட்டு கடிதம் எதுவும் எனக்கு இதுவரை வரவில்லை

## பொது வேட்பாளர் அரியநேத்திரன்

பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரனிடம் விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதுவரை கட்சிக் கூட்டங்களிலும் பங்கேற்ற தடை விதிக்கப்பட்டுள்ளதாக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

ஆனால், இதுவரையில் தமிழரசுக்கட்சியிடம் இருந்து விளக்கம் கோரிய கடிதம் எதுவும் தனக்கு வரவில்லை என்று அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக தெரிவித்த அரியநேத்திரன்,

“ஏற்கனவே ஒரு வாரத்துக்கு முதல் ஒரு கூட்டம் கூட்டப்பட்டு அதில் 7 நாட்களுக்குள் பதில் தரவேண்டும் என்றொரு செய்தி வந்திருந்தது. பின் நேற்று மீண்டும் இரண்டாம் முறையாக கூட்டப்பட்ட கூட்டத்தில் 2 வாரத்துக்குள் விளக்கம்



தர வேண்டும் என செய்திகளைப் பார்த்தேன்.

ஆனால் எனக்கு எந்த விளக்கமும் கோரி கடிதங்கள் எதுவும் வரவில்லை. அப்படி அனுப்பப்பட்டால் அதற்குப் பதில் அளிக்க நான் தயாராக இருக்கிறன்.

2 ►

# பிரித்தானியாவில் பயிற்சி பெற்ற இராணுவ அதிகாரி தலைமறைவு

பிரித்தானியாவின் புகழ்பெற்ற சன்டஸ்ட் இராணுவ கல்லூரியில் இருந்து கடந்த வாரம் வெளியேறிய இலங்கையின் கடேற் அதிகாரியான இரண்டாம் லெப்டினன்ட் பதவியில் உள்ள ஒருவர் காணாமல் போயுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வருவதைத் தவிர்த்து அவர் பிரித்தானியாவில் தலைமறைவாகியிருக்கலாம் என்று கருதப்படும் நிலையில், இது தொடர்பான விசாரணைகளை பாதுகாப்பு அமைச்சு முடுக்கிவிட்டுள்ளது.

பயிற்சிக்கு பின்னராக அணிவகுப்பை அடுத்து இந்த வாரம் அவர் இலங்கைக்கு திரும்பவிருந்தார். எனினும் இலங்கை அதிகாரிகளுகள் பயணம் செய்த விமானம் புறப்பட்டபோது அவர் விமானத்துக்கு வரவில்லை.

லண்டனிலுள்ள இலங்கையின் பிரித்தானியாவுக்கான உயர் ஸ்தானிகரகம், கடந்த சனிக்கிழமையன்று அவருக்கான விமான நிலைய போக்குவரத்தை ஏற்பாடு செய்ய முன்வந்தபோது, அவர் அதனை நிராகரித்தார். தாமே நேரடியாக விமான நிலையத்துக்கு வருவதாக தெரிவித்திருந்தார் என்றும் உயர் ஸ்தானிகராலய வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் பிரித்தானியாவில் தங்கியிருந்த இடம் அங்குள்ள இலங்கை உயர் ஸ்தானிகரத்துக்கு தெரியும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவனல்லையை சேர்ந்த இந்த அதிகாரியின

2 ►

# காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு அச்சுறுத்தல்

## நாளை மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக அதிகாரிகள் தமது உறுப்பினர்களை பல தடவைகள் அச்சுறுத்தியதாக குற்றம்சாட்டியுள்ள முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம், இதனைக் கண்டித்து நாளை 20 ஆம் திகதி மாபெரும் கண்டனப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி இதனைத் தெரிவித்தார்.

மரிய சுரேஷ் ஈஸ்வரி மேலும் தெரிவிக்கையில், “காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக அதிகாரிகள் தமது உறுப்பினர்களை பல தடவைகள் அச்சுறுத்தியுள்ளனர்” என்றும், “கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினர் செயற்பட்ட

2 ►

# ரணிலுக்கு சிலின்டர்தான் ஆட்சேபனை நிராகரிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிலிண்டர் சின்னம் லான ஆட்சேபனைகளை நிராகரிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஜன அரகலயே புரவெசியோ என்ற அமைப்பின் பொதுச்செயலாளர் சானக்க பண்டார என்பவரினால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இது குறித்த முறைப்பாட்டை முன்வைத்திருந்தனர்.

2023ஆம் ஆண்டில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு தமது அமைப்புக்கு அந்தச் சின்னம் வழங்கப்பட்டுள்ளது எனவும் குறித்த சின்னம் தங்களது கட்சிக்குச் சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அது தங்களது ஜன அரகலய புரவெசியோ கட்சிக்கு உரியது எனவும் அந்த அமைப்பின் பொதுச்



2 ►

## பிரித்தானியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயல் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களுக்கு அதர்ச்சியைக் கொடுத்துள்ளது. இலங்கைக்கு வருவதைத் தவிர்த்து அவர் பிரித்தானியாவில் தலைமறைவாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இது தொடர்பில் லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை முடுக கிவிட்டுள்ளது.

## விளக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கும் போது, பொது வேட்பாளர் தெரிவு தொடர்பில் அடிக்கடி கூட்டம் கூட்டப்படுவது எந்தமாதிரியான மன நிலையில் அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர் எனத் தெரியவில்லை.

நான்பொது வேட்பாளராக போட்டியிடுவதன் நோக்கம், தந்தை செல்வாவின் கொள்கையின் அடிப்படையில் தான் நான் போட்டியிட முடிவெடுத்துள்ளேன். ஆகவே நான் 22ம் திகதி என்ன முடிவு வருகிறதோ அதை ஏற்றுக்கொள்ளத்தயாரக இருக்கிறேன்.

பொது வேட்பாளராக நான் போட்டியிடுவது தவறாக இருந்தால், ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்கப் போகின்றார்கள் என்ற எந்த ஒரு முடிவையும் கட்சி இது வரையில் எடுக்கவில்லை.

ஆனால் இது தொடர்பில் முடிவெடுக்காமலே கட்சியில் இருக்கிறவர்கள் தனிதனியாகக் கருத்துக்களைக் கூறுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக கட்சி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்ற வருத்தம் எனக்குள்ளது" என்றும் அவர் தெரிவத்தார்.

## பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் நான்காவது பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ருவன்வெல்ல தெஹியோவிட்ட பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

"இன்னும் சில தினங்களில் வருகின்ற ஜனாதிபதி தேர்தலுக்காக, திருடர்களுடன் டீல் இல்லாத அரசியல் ஒப்பந்தங்களுக்காக மக்களைக் காட்டிக் கொடுக்காத மக்களின் வாக்குகளைப் பெற்று அவர்களை மறந்து விடாத நன்றிக் கடன் அறிந்த ஒரு யுகத்தை உருவாக்கி, அந்த யுகத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களைப் போஷிக்கும் சுவர்ண மயமான காலமாக மாற்றி திருடர்களைப் பிடிக்கின்ற யுகமாக மாற்றுவோம். திருடர்கள் மோசடிக்காரர்கள் ஊழல்வாதிகள் ஆகியோருடன் எனக்கு டீல் இல்லை" என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## காணாமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விதம் எமக்கு எதிரானதாகவே அமைந்திருந்தது" என்றும் அவர் தெரிவித்தார்.

"காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள் எமக்கு எதிரானது மட்டுமல்ல அரசாங்கத்தை காப்பாற்றும் வகையிலும் அமைந்திருக்கின்றன" என்றும் சுட்டிக்காட்டிய மரிய சுரேஷ் ஈஸ்வரி, "கொக்குதொடுவாய் புதைகுழி மூடப்பட்டமை எமக்கு அதிர்ச்சி அளிக்கின்றது" என்றும், "இந்த புதைகுழியைச் சூழ பல மனித எச்சங்கள் மேலும் இருக்கின்றனவா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமக்கு எந்தவிதமான கரிசனையும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், "இது காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எந்தவிதமான தாக்கத்தையும் செலுத்தப் போவதில்லை" என்றும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக அதிகாரிகள் தமது உறுப்பினர்களை அச்சுறுத்தியமையை கண்டித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்கிழமை மாபெரும் கண்டனப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கட்சி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க பதிலளித்துள்ளார்.

# செல்வசந்நிதி தேர் திருவிழாவில் 35 பவுண் நகைகள் அபகரிப்பு

யாழ்ப்பாணம் செல்வசந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டிருந்த பக்தர்களின் சுமார் 35 பவுண் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க செல்வ சந்நிதி முருகன் ஆலய வருடாந்திர தேர் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தேர்த்திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் , வெளிநாடுகளில் இருந்தும் , பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து தேர் திருவிழாவை நேரில் கண்டு களித்தனர்.

அதன் போது ஆலய சூழல்களில் சனநெரிசல்களை பயன்படுத்தி திருடர்கள் தம் கைவரிசைகளை காட்டியுள்ளனர். பல பக்தர்களின் பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 35 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நிதி இடைநிறுத்தப்பட காரணம் என்ன? ஜனாதிபதிக்கு ரிஷாட் பதியுதீன் கடிதம்



வடக்கு, கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான அரசாங்க நிதி இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து இந்த நிதி நிறுத்தம் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எம்.பி பதியுதீன் எழுதியுள்ள கடிதத்தில் குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட கழகங்கள், நலன்புரிச் சங்கங்கள் மற்றும் ஏனைய சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கணிசமான தொகையை ஒதுக்கியமைக்காக எம்.பி பதியுதீன் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அந்த திட்டங்களை உடனடியாக நிறுத்துமாறும், எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி அந்த ஒதுக்கீட்டை திரும்பப் பெறுமாறும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

"ஜனாதிபதி சஜித் பிரேமதாசவிற்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நான் ஆதரவளிப்பதாக அறிவித்த பின் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டது சந்தேகத்திற்குரியது. ஆனாலும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவும், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் தலைவராகவும், கடந்த சில தசாப்தங்களாக உங்களது ஆட்சியின் கீழ் பணியாற்றி வருகிறேன்.

அந்த அனுபவத்தின் மூலம் நீங்கள், உன்னதமானவர் எப்போதும் உண்மையுள்ளவராகவும், விடா முயற்சியுள்ளவராகவும், சிறந்த தார்மீக மற்றும் நெறிமுறைகளைக் கொண்டவர் என்பதை நான் குறிப்பிட்டுள்ளேன்.

அந்தவகையில், மேற்கூறிய காரணத்தினால், சில தனிநபர்கள் மற்றும் அதிகாரிகளால் நெறிமுறையற்ற வகையில், ஜனாதிபதி அவர்களுக்குத் தெரியாமல், இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன்" என எம்.பி பதியுதீன் கூறினார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஹரீன், மனுஷவுக்கு ஆலோசகர் பதவி தேர்தல் விதிகளை மீறும் ஜனாதிபதி

## அநுரகுமார திசநாயக்க குற்றச்சாட்டு



ஹரீன் பெர்னான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை ஜனாதிபதி தனது ஆலோசர்களாக நியமித்துள்ளமை தேர்தல் விதிமுறைகளிற்கு முரணான விடயம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறிவிட்டார் என அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் காலத்தின் போது புதிய நியமனங்களிற்கு தடை விதித்து தேர்தல் ஆணைக்குழு உத்தரவை வெளியிட்டுள்ளது, இந்த உத்தரவை ஜனாதிபதி மீறியுள்ளார் என்றும் அநுரகுமார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பதவிகளில் இருந்து அவர்கள் விலகியபோதிலும், குறிப்பிட்ட அமைச்சுகளின் ஆலோசகர்களாக ஜனாதிபதி அவர்களை நியமித்துள்ளார். இதன் மூலம் அவர்கள் அந்த அமைச்சுகளின் நடவடிக்கைகளில் தலையிடலாம், ஊதியம் பெறலாம், வாகனங்களை பெறலாம் என ஜேவிபியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய கட்சியில் உள்ள முக்கிய பிரமுகர்கள் அனைவரும் அரசாங்கத்தின் நிதியை பயன்படுத்துகின்றனர். அகில விராஜ் உட்பட பலருக்கு ஆலோசகர்கள் பதவி வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக அரச வளங்களை துஸ்பிரயோகம் செய்கின்றார் என்றும் அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

# ஹரினுக்கு ஜனாதிபதி வழங்கிய பதவி தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு



அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய ஹரின் பெர்ணான்டோவுக்கு அவர் பதவி வகித்த அமைச்சுகளில் ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சட்ட கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

குறித்த நியமனம் தொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக அந்த கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட சட்ட செயலாளர் சட்டத்தரணி துசித்த குணசேகர தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் உயர்நீதிமன்றின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் ஜனாதிபதி ஆலோசகர் பதவிக்கு ஹரின் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளமை தேர்தல் சட்டத்தை மீறுவதாகும் என சட்டத்தரணி துசித்த குணசேகர குறிப்பிட்டுள்ளார்.




# குரங்கம்மை நோய் குறித்து விழிப்புணர்வு

உலகளாவிய ரீதியில் குரங்கம்மை நோய் பரவல் அதிகரித்துள்ளமையினால் இலங்கையானது நோய் தொடர்பில் விழிப்புணர்வை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குரங்கம்மை நோயை சர்வதேச சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனம் செய்துள்ளது.

குரம்மை நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகளாவாக பதிவாக வில்லை. தற்காலிக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செயலில் இருப்பதால் நோய் தாக்கம் தொடர்பில் அச்சுறுத்தல் குறைவாக உள்ளது.

எனினும், கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க சுகாதார அமைச்சகம் கலந்தாலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளமையினால் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் கண்காணிப்பு நடடிவடிக்கைகளை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# தேசியக் கொடி, மதச்சின்னங்களை பிரசாரத்துக்குப் பயன்படுத்த தடை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு




தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடி அல்லது மதச் சின்னங்களைப் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களுக்கு தேசிய கொடியை பயன்படுத்தும் கட்சிகள் மீது சடட் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை தொடருமாயின் எதிர்வரும் சில நாட்களில் தேசிய கீதம் கட்சியின் பாடலாக மாறும் எனவும் அவர் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவிக்கையில், “அரசியல்வாதிகளை பார்க்கிறோம் அவர்கள் இல்லாமல் தேர்தல் இல்லை. தேசியக் கொடியின் பெருமை தற்போது இல்லாமற்போய் கொண்டிருக்கிறது.

கிரிக்கெட் போட்டிகளில் தேசியக் கொடியை சுற்றிக்கொண்டு மற்றொரு கையில் மதுபான போத்தைலை வைத்துக்கொண்டு நடனமாடுகின்றனர். முறையான அரசியல் கொள்கைகள் இன்மையே இதற்கு காரணம். எனவே, தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடியை பயன்படுத்த வேண்டாம் ” என்றார்.

# இலங்கைப் பொருளாதாரத்தில் நிழல் பொருளியல் சிந்தனைகளின் தாக்கம்



கலாநிதி. ஏ. எல் முகம்மது அஸ்லம்
பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலகம் சம்மாந்துறை

**நிழல் பொருளியல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை பல வழிகளில் பாதித்துள்ளது. முதலாவதாக, இது அரசின் வருமானத்தை குறைத்துள்ளது. நிழல் பொருளாதார நடவ டிக்கைகள் வரியிலிருந்து விலக்கு பெறுவதால், அரசிற்கு குறைந்த வருமானம் கிடைக்கிறது. இதன் விளைவாக, அரசிற்கு பொது சேவைகளை வழங்குவதற்கும், அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் தேவையான நிதி இல்லாமல் போகிறது**



இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் நிழல் பொருளியல் சிந்தனைகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

நிழல் பொருளியல் என்பது, அரசின் கட்டுப்பாடுகளுக்கு வெளியே செயற்படும் பொருளாதார நடவடிக்கைகளாகும். இது கறுப்புப் பொருளாதாரம், சட்டவிரோத பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்த ஊழல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நிழல் பொருளியல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை பல வழிகளில் பாதித்துள்ளது. முதலாவதாக, இது அரசின் வருமானத்தை குறைத்துள்ளது. நிழல் பொருளாதார நடவடிக்கைகள் வரியிலிருந்து விலக்கு பெறுவதால், அரசிற்கு குறைந்த வருமானம் கிடைக்கிறது. இதன் விளைவாக, அரசிற்கு பொது சேவைகளை வழங்குவதற்கும், அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் தேவையான நிதி இல்லாமல் போகிறது.

இரண்டாவதாக, நிழல் பொருளியல் ஊழலுக்கு வழிவகுக்கிறது. நிழல் பொருளாதார நடவடிக்கைகள் பெரும்பாலும் சட்டவிரோதமானவை மற்றும் அரச அதிகாரிகளுடன் தொடர்புடையவை. இது ஊழல் மற்றும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது.

மூன்றாவதாக, நிழல் பொருளியல் சமூக சமத்துவமின்மையை அதிகரிக்கிறது. நிழல் பொருளாதாரத்தில் ஈடுபடும் சிலர் அதிக செல்வத்தை ஈட்டுகின்றனர், அதே நேரத்தில் பெரும்பான்மையான மக்கள் குறைந்த வருமானத்துடன் போராடுகின்றனர். இது சமூகப் பதற்றம் மற்றும் அதிருப்தியை அதிகரிக்கிறது.

நான்காவதாக, நிழல் பொருளியல் சட்ட அமுலாக்கத்தை பாதிக்கிறது. நிழல் பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்திற்கு புறம்பானவை என்பதால், அவற்றை கட்டுப்படுத்துவது சவாலாக உள்ளது. இது குற்றச் செயல்பாடுகளுக்கு வழிவகுக்கும் மற்றும் சட்ட ஒழுங்கைப் பாதிக்கும்.

இறுதியாக, நிழல் பொருளியல் முதலீட்டை ஊக்குவிப்பதில் தடையாக உள்ளது. முதலீட்டாளர்கள் நிலையற்ற மற்றும் ஊழல் நிறைந்த பொருளாதாரத்தில் முதலீடு செய்ய தயக்கம் காட்டுகின்றனர். இது பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.

நிழல் பொருளியலின் தாக்கத்தை குறைக்க, அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதில் வரி சீர்திருத்தம், ஊழல் தடுப்பு, சட்ட அமுலாக்கத்தை வலுப்படுத்துதல் மற்றும் மற்றும் பொறுப்புக்கூறு ஆகியவை அடங்கும். மேலும், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும் அவசியம்.

முடிவில், நிழல் பொருளியல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அரசின்வருமானத்தை குறைத்து, ஊழலுக்கு வழிவகுத்து, சமூக சமத்துவமின்மையை அதிகரித்து, சட்ட அமுலாக்கத்தை பாதித்து, முதலீட்டை ஊக்குவிப்பதில் தடையாக உள்ளது. இந்த பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



# மண்டூரில் இன்று தீர்த்தம்





"சின்னக் கதிர்காமம்" என அழைக்கப்படும் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை ஆயிரக்கணக்கான பக்தர்கள் படைசூழ இடம்பெற்ற போது.. (படங்கள். வி.ரி.சகாதேவராஜா)

# பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை



(நூருல ஹுதா உமர)

சமூகம் செயற்திட்டங்களில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஊடாக நல்லாட்சியை உறுதிப்படுத்தும் நோக்கில் செயற்படும் றுநு ஊழநெஉவ திட்டத்தின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட சிவில் சமூக மற்றும், சமூக ஊடக செயற்பாட்டாளர்களின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்பட்ட செயலமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இடம்பெற்ற இப்பயிற்சி பட்டறையில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் பிரச்சினைகள் உட்பட நிலைபேறான அபிவிருத்தியைப் பாதிக்கும் பல்வேறு விடயதானங்கள் குறித்து முன்வைப்புகள் இடம்பெற்றன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் குரல்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான அம்ஜத் முகம்மட், புழுதி சமூக உரிமைக்கான அமைப்பின் செயற்பாட்டாளர் கோபகன் ஆகியோர் இந்நிகழ்வின் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இந்நிகழ்வின், இரண்டாம் அமர்வின் பிரதம அதிதியாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னாள் வதிவிட பிரதிநிதி சட்ட முதுமானி அப்துல் அஸீஸ், அத்துடன் நிகழ்வின் சிறப்பு அதிதியாக அமெரிக்கன் ஸ்பேஸஸ் பணிப்பாளர் முகம்மட் நௌஸாத் ஆகியோர் கலந்து கெண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய மட்டத்திற்கு தெரிவான ஸாஹிரா மாணவர்கள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்திற்கான சதுரங்க போட்டி திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில் ஆண்களுக்கான 20 வயது பிரிவில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் எம்.ஏ.தமீம் சம்பியனாகவும், ஆண்களுக்கான 17 வயது பிரிவில் எம்.இசட்.எம்.சனீப் சம்பியனாகவும் அதே பிரிவில் ஏ.எஸ்.ஏ.மிஜ்வாத் இரண்டாம் நிலையையும் , ஆண்களுக்கான 15வயது பிரிவில் ஏ.அர்ஹம் பரவீஸ் இரண்டாம் நிலையையும் பெற்றுக் கொண்டதோடு எம்.ஜே.ஐ.சஹ்மி, எம்.என்.எம்.நிசாத், ஏ.ஏ.அனூப் மற்றும் டீ.ஏ.செய்மி ஆகிய மாணவர்களும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகினர். மேற்படி போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் , போட்டிக்கு மாணவர்களுக்கு பயிற்சியளித்து அழைத்துச் சென்ற சதுரங்க பொறுப்பாசிரியர் எம்.வை.எம்.றகீப் மற்றும், கல்லூரியின் சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ்.எல்.சுஹ்தான் ஆகியோருக்கு கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.







# இளைஞர்களுக்கு சந்தப்பம் என்ன?

## கற்பிட்டியில் கருத்தாடல்





(கற்பிட்டி நிருபர)

இளைஞர்களுக்கான அரசியல் இடைவெளியை நிரப்புவதற்கு தூய தேச கட்சியின் முன்னெடுப்புகள் என்ன, மிக நீண்ட காலமாக இளைஞர்களின் அரசியல் வரவை தடை போடும் மூத்த அரசியல்வாதிகள் இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க தயாரில்லை என்பதனால் இளைஞர்களுக்கான அரசியல் பாதையை தூய தேச கட்சி எவ்வாறு வழி அமைத்துக் கொடுக்கும் அதற்கான முன்னெடுப்புகள் தொடர்பான சிநேகபூர்வ சந்திப்பு ஒன்று கற்பிட்டி இளைஞர்களுக்கிடையில் தூய தேச கட்சியின் கற்பிட்டி அமைப்பாளர் மொஹமட் ஹஸ்லான் தலைமையில் இடம்பெற்றது.

சிநேக பூர்வமான நட்பு ரீதியான அரசியல் கலந்துரையாடலாக இடம்பெற்ற இந்நிகழ்வில் தூ ய தேச கட்சியின் தலைவர் இஷாம் மரைக்கார் கலந்து கொண்டு தூய தேச கட்சியின் எதிர்கால அரசியல் நகர்வுகளையும், திட்டங்களையும் இளைஞர்களோடு பகிர்ந்து கொண்டார்.

புதிய இளம்தலைமுறையினரும் இளைஞர்களும் எம்மோடு கைகோர்க்க வேண்டும் என்று நாம் ஆசைப்படுகின்றோம். இதுவரை ஜனாதிபதி தேர்தல் பற்றிய எந்தவிதமான தீர்மானங்களோ ஆதரவு பற்றிய பேச்சுவாரத்தைகளோ நாங்கள் முன்னெடுக்கவில்லை ஆனால் இந்த ஜனாதிபதி தேர்தல் பற்றிய நல்ல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம் மக்களுக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பற்றி விளக்கமளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.






## கற்பிட்டி அல் அக்ஸா மாணவன் தெரிவு

புத்தளம் வலய மட்ட தமிழ் மொழி தின பாவோதல் போட்டியில் மூன்றாம் பிரிவில் முதலாம் இடத்தை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 08 ல் கல்வி பயிலும் மாணவன் ஐ.எம் இனான் பெற்றுள்ளது டன் மாகாண மட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கற்பிட்டி பெரிய குடியிருப்பு ஜூம்ஆ பள்ளிவாகல் வீதியில் வசிக்கும் எம்.ஐ இப்திகார் மற்றும் எம்.ஜீ பஜ்ரியா தம்பதிகளின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் தொடர்பாக 519 முறைப்பாடுகள்

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வரை 519 முறைப பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் நேற்று வரை இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான 503 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக கப்பட்டுள்ளது.

வன்முறைச் செயல்கள் தொடர்பாக ஒரு முறைப்பாடும், ஏனைய முறைப்பாடுகள் 15 கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுவரொட்டிகளை அகற்ற 1,500 பேர்

அடுத்த மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பொது இடங்களில் உள்ள சட்ட விரோத சுவரொட்டிகள், உருவப்படங்கள் , பதாதைகள் ஆகியவற்றை அகற்றும் பணியில், 1,500 பேரை பொலிஸார் பணிக்கமர்த்தி உள்ளனர்.

பொது இடங்களில் உள்ள சட்ட விரோத சுவரொட்டிகள், உருவப்படங்கள், பதாதைகள், ஆகியவற்றை அகற்றும் பணியில், 1,500 பேரை பொலிஸார் ஈடுபடுத்தி உள்ளனர்.

இதுகுறித்து பொலிசார் கூறியதாவது: தேர்தல் பிரசார விதிகளை மீறி, வேட்பாளர்கள் காட்சிப்படுத்திய பொருட்களை அகற்றுவதற்காக, மாகாண பொலிஸ் நிலையங்களில் 1,500 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு நாளைக்கு 1,500 ஷரூபா சம்பளம் வழங்கப்படும்.

சட்ட விரோதமாக உள்ள சுவரொட்டிகள் ,உருவப்படங்கள், பதாதைகள் ஆகியவற்றை இவர்கள் அகற்றுவர். இவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்படும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2024இல் வெளியிடப்பெற்றது.